# யூலை- 26 - புதன்

### புனிதர்கள் அன்னம்மா மற்றும் சுவக்கீன்

### தம் விருப்பம்போல் உணவு கேட்டு வேண்டுமென்றே இறைவனைச் சோதித்தனர். திபா. 78:18

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 16:1 – 5, 9-15

இஸ்ரயேல் மக்களின் கூட்டமைப்பினர் அனைவரும் ஏலிமிலிருந்து புறப்பட்டு ஏலிம், சீனாய் இவற்றிற்கிடையேயுள்ள சீன் பாலைநிலத்தை வந்தடைந்தனர். இவர்கள் எகிப்து நாட்டினின்று வெளியேறி வந்த இரண்டாம் மாதம் பதினைந்தாம் நாள் அது.இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பினர் அனைவரும் அந்தப் பாலைநிலத்தில் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தனர்.இஸ்ரயேல் மக்கள் அவர்களை நோக்கி, ”இறைச்சிப் பாத்திரத்தின் அருகில் அமர்ந்து, அப்பம் உண்டு நிறைவடைந்து, எகிப்து நாட்டிலேயே ஆண்டவர் கையால் நாங்கள் இறந்திருந்தால் எத்துணை நலமாயிருந்திருக்கும்! ஆனால் இந்தச் சபையினர் அனைவரும் பசியால் மாண்டு போகவோ இப்பாலைநிலத்திற்குள் நீங்கள் எங்களைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்கள்” என்றனர்.அப்போது ஆண்டவர் மோசேயை நோக்கி, ”இதோ பார்! நான் உங்களுக்காக வானத்திலிருந்து அப்பத்தைப் பொழியப் போகிறேன். மக்கள் வெளியே போய்த் தேவையானதை அன்றன்று சேகரித்துக்கொள்ள வேண்டும். என் கட்டளைப்படி நடப்பார்களா இல்லையா என்பதை நான் இவ்வாறு சோதித்தறியப் போகிறேன்.ஆனால் ஆறாம் நாளில், நாள்தோறும் அவர்கள் சேகரித்து வந்ததைவிட இருமடங்கு சேகரித்துத் தயாரித்து வைத்துக் கொள்ளவேண்டும்” என்றார். மோசே ஆரோனிடம், ”நீர் இஸ்ரயேல், மக்கள் கூட்டமைப்பு முழுவதையும் நோக்கி, ஆண்டவர் திருமுன் அணுகிச் செல்லுங்கள் ஏனெனில் அவர் உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டுள்ளார் என்று சொல்லும்” என்றார்.அவ்வாறே ஆரோனும் இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பு முழுவதையும் நோக்கிப் பேசிக் கொண்டிருக்கையில், அவர்கள் பாலை நிலப்பக்கமாய்த் திரும்பினார்கள். அப்போது ஆண்டவரின் மாட்சி மேகத்தில் தோன்றியது.ஆண்டவர் மோசேயை நோக்கி, ”இஸ்ரயேல் மக்களின் முறையீடுகளை நான் கேட்டுள்ளேன். நீ அவர்களிடம், ”மாலையில் நீங்கள் இறைச்சி உண்ணலாம். காலையில் அப்பம் உண்டு நிறைவடையலாம். நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர் என்பதை இதனால் நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்” என்று சொல்” என்றார்.மாலையில் காடைகள் பறந்து வந்து கூடாரங்களை மூடிக்கொண்டன. காலையில் பனிப்படலம் கூடாரத்தைச் சுற்றிப் படிந்திருந்தது.பனிப்படலம் மறைந்தபோது பாலைநிலப்பரப்பின்மேல் மென்மையான, தட்டையான, மெல்லிய உறைபனி போன்ற சிறிய பொருள் காணப்பட்டது.இஸ்ரயேல் மக்கள் அதைப் பார்த்துவிட்டு, ஒருவரை ஒருவர் நோக்கி ”மன்னா” என்றனர். ஏனெனில், அது என்ன என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அப்போது மோசே அவர்களை நோக்கி, ”ஆண்டவர் உங்களுக்கு உணவாகத் தந்த அப்பம் இதுவே.

**பதில்பாடல் :** ஆண்டவர் அவர்களுக்கு வானத்து உணவை வழங்கினார்.

## நற்செய்தி : மத்தேயு 13 : 1 – 9

அக்காலத்தில் இயேசு வீட்டிற்கு வெளியே சென்று கடலோரத்தில் அமர்ந்தார்.மக்கள் பெருந்திரளாய் அவரிடம் ஒன்றுகூடி வந்தனர். ஆகவே அவர் படகில் ஏறி அமர்ந்தார். திரண்டிருந்த மக்கள் அனைவரும் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தனர்.அவர் உவமைகள் வாயிலாகப் பலவற்றைக் குறித்து அவர்களோடு பேசினார்” விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார்.அவர் விதைக்கும்பொழுது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன.வேறு சில விதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. ஆனால் கதிரவன் மேலே எழ, அவை காய்ந்து, வேரில்லாமையால் கருகிப் போயின.மற்றும் சில விதைகள் முட்செடிகளின் இடையே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கிவிட்டன.ஆனால் இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும் சில அறுபது மடங்காகவும் சில முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன.கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்” என்றார்.

**தியானம்:** இவ்வுலகில் இறை சித்தம் நிறைவேற, எல்லாம் வல்ல இறைவனது கருவிகளாகச் செயல்பட ஒத்துழைத்த, தூய கன்னி மரியாவின் பெற்றோர், புனிதர்கள் சுவக்கீன் மற்றும் அன்னம்மா என்பவர்களது திருவிழாவை இன்று கொண்டாடுகிறோம். இறைவார்த்தையின்படி வாழ்வதன் மூலம் நிறைவாழ்வை அடைய முடியும் என்பதனை இன்றைய நற்செய்தி, விதைப்பவன் உவமை வாயிலாக எமக்குத் தெரிவிக்கின்றது. இறை வார்த்தையானது காலத்திற்குக் காலம் எமதுள்ளம் எனப்படும் நிலத்தில் பலவழிகளிலும் விதைக்கப்பட்டாலும், அது முளைவிட்டு வளரும் பெருவிருட்சமாக நாம் வாழுகின்றோமா? அல்லது முட்புதராக, கற்பாறையாக, வழியோர நிலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோமா? எம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். ஆதியிலே வார்த்தை வடிவினிலே நடமாடிக் கொண்டிருந்த இறைவன், தமது திருமகனை மனுவுருவானவராக, இவ்வுலகிற்கு அனுப்பி மனுக்குலத்தை மீட்டெடுத்தார் என நாம் வேதாகமத்திலே படிக்கின்றோம். இதனை உறுதிப்படுத்தவே “வானத்திலிருந்து இறங்கிவரும் மழையும், பனியும் நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச்செய்து, விதைப்பவனுக்கு உணவு கொடுக்காமல் திரும்பிச் செல்லாதது போல் இறைவனின் வாயிலிருந்து புறப்படும் வாக்கும் இருக்கும்“ எனப் பவுலடிகள் கூறுகின்றார். ஆதலால் நாம் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டு, கடவுளின் பிள்ளைக்குரிய விடுதலையையும், பெருமையையும் பெற்றுக் கொள்ளும் எதிர் நோக்கோடு அவ்விடுதலைக்கான நாளை எதிர்நோக்கியவர்களாக இருக்கவேண்டுமென அழைக்கப் பட்டுள்ளோம். இறை வார்த்தை காதால் வெறுமனே கேட்டுவிட்டுப் போவதற்காக எமக்குப் போதிக்கப்படவில்லை. அல்லது அழகாக எழுதி சுவர்களில் மாட்டி வைப்பதற்காகவும் இல்லை. மாறாக, நிறை வாழ்வை நாம் அடைய வேண்டுமாயின் இறைவார்த்தைக் கமைவான நல்ல பலன் கொடுக்கும் விளைநிலங்களாக மாறவேண்டும். “இறை வார்த்தை சொன்னதைச் செய்யாமல் திரும்பாது” என இறைவாக்கினர் ஏசாயா முன்னுரைத்ததை நம்பி நாம் பலன்தரும் பெருவிருட்சங்களாக வளராவிடினும், இன்று நாம் நினைவுகூரும் புனிதர்கள் சுவக்கீன் மற்றும் அன்னம்மா வாழ்ந்து காட்டிய வழியில் சிறு பயிர்களாகவாவது வாழ முற்படுவோம்.